தமிழ்மணம் சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்
Tamilmanam International Research Journal of Tamil Studies | ISSN(o): 3049-0723
[Impact Factor: 9.47] Monthly, Peer-Reviewed, Refereed, Indexed Journal with IC Value : 86.87
Volume - 1, Issue - 10, July - 2025

DOIs: https://doi.org/10.63300/tm0110.25 --:-- Research Paper

# The Social Reality of Family Presented by Vannadasan's Writings

**A. Shanthi Rani[1], Dr. S. Sujatha[2]**
1. Assistant Professor, G.T.N. Arts College, Dindigul
eMail: shantha1619@gmail.com
2. Associate Professor, G.T.N. Arts College Dindigul.
eMail: gtnsuja@gmail.com

## Abstract

*In today's era, since the family depends on the individual and the society depends on the family, every person should realize their duty and strive to live well and express their values without harming others. It is necessary to know how the family should be, its structure, roles and functions, etc. Individual morality greatly contributes to the social development of man. When we live with morality for humanity, our family also improves.; The problems and difficulties that arise in life are only caused by our actions, we should learn to enjoy what we see in life and live it. This article is designed to illustrate the thoughts and truths, Vanadasan has learned from the people he has encountered in his works, as well as the experiences he has had in life.*

**Keywords** : *morality, control, social structure, association, functions of the family. Vannadasan Writings*

# வண்ணதாசன் எழுத்துகள் முன்வைக்கும் குடும்பம் குறித்த சமூக யதார்த்தம்

**அ. சாந்தி ராணி[1], முனைவர் சா சுஜாதா[2]**
1.உதவிப்பேராசிரியர், ஜி.டி.என். கலைக்கல்லூரி, திண்டுக்கல்
2.இணைப்பேராசிரியர். ஜி.டி.என். கலைக்கல்லூரி திண்டுக்கல்.

## ஆய்வுச்சுருக்கம்

இன்றைய கால கட்டத்தில் தனிமனிதனைச் சார்ந்தே குடும்பமும், குடும்பத்தைச் சார்ந்தே சமூகமும் இருப்பதால் ஒவ்வொரு மனிதனும் தனது கடமையை உணர்ந்து பிறருக்கு தீங்கு நினையா வண்ணம் நல்நிலையில் வாழ்ந்து மதிப்பீடுகளை வெளிப்படுத்த முற்படுத்த வேண்டும். குடும்பமானது எவ்வாறு இருக்க வேண்டும், அதன் அமைப்பு முறை, பங்கு மற்றும் பணிகள் போன்றவற்றை அறிந்திருத்தல் அவசியமாகும். மனிதனின் சமுதாய வளர்ச்சிக்கு தனிமனித ஒழுக்கமே பெரிதும் துணை செய்கிறது. மனிதனுக்கான அறநெறியுடன் வாழும்பொழுது குடும்பமும் மேம்பாடு அடையும.; வாழ்வில் ஏற்படுகின்ற பிரச்சனைகளும் சிக்கல்களும் நம் செயல்களால் மட்டுமே ஏற்படுவது, வாழ்வில் நாம் காண்கின்ற ஒன்றினை ரசித்து வாழக் கற்றுக்கொள்ள வேண்டும் என்பது பற்றிய சிந்தனைகளை வண்ணதாசன் தன் படைப்புகளில் தான் கண்ட மனிதர்களிடம் கற்றுக்கொண்ட வாழ்வில் ஏற்பட்ட அனுபவத்தின் மீது பெறப்பட்ட உண்மைகளையும் எடுத்துக்கூறும் விதமாக இக்கட்டுரையானது அமைகின்றது. திறவுச்சொற்கள் அறநெறி, கட்டுப்பாடு, சமூகக் கட்டமைப்பு, கூட்டமைப்பு, குடும்பத்தின் பணிகள்.

**குறிப்புச் சொற்கள்** : *ஒழுக்கம், கட்டுப்பாடு, சமூக அமைப்பு, கூட்டமைப்பு, குடும்பத்தின் பணிகள்*

**முன்னுரை**

ஒவ்வொரு மனிதனும் ஏனைய மனிதர்களுடன் கொண்டிருக்கின்ற சிக்கலான சமூக உறவுமுறைத் தொடர்புகளைத்தான் சமூகம் என்கின்றோம். சமூகம் என்பது மக்களின் தொகுப்பு பல குடும்பங்களின் பல ஊர்களின் தொகுப்பில் உறவுமுறைகளின் வழிமுறைகளை ஏற்படுத்தும் நிறுவனம். சமூகக்கட்டமைப்பின் அடிப்படை ஆதாரமாக விளங்குவதே குடும்பம். ஓர் ஆணும் பெண்ணும் இணைந்து குடும்ப வாழ்க்கையினைச் சமுதாயத்தின் நெறிமுறைகளின் படி நடக்கும் பொழுது கூட்டமைப்பு உருவாகின்றது.

தனி மனிதனிடம் குறிப்பிட்ட சில பண்புகள் இயல்பாக அமைந்திருக்கும். சமுதாயத்தில் தனது கடமையை உணர்ந்து பிறருக்குத் துன்பம் ஏற்படுத்தாமல், தன்னால் இயன்ற நன்மைகளைச் செய்து சமுதாய மதிப்பினைக் காத்து நன்னெறிப்படுத்துவதையும் அவற்றின் முக்கியத்துவத்தையும் எடுத்துரைக்க வேண்டிய தேவை உள்ளது.

வண்ணதாசன் எழுதிய சிறுகதைப்பகுதியிலும், கவிதைகளிலும் குடும்பத்தின் நிலைகள் பற்றியும் அதில் ஏற்படுகின்ற சிக்கல்கள், ஏமாற்றங்கள், சண்டைகள், தீர்வுகள், காதல், திருமணம், பிரிவு, இது போன்ற பல நிகழ்ச்சிகளைப் படம் பிடித்துக் காட்டியுள்ளார். இவை சில நேரங்களில் நம் வாழ்க்கையை எண்ணிப்பார்க்கும் அளவிற்குக் கொண்டு செல்கிறது.

**குடும்பத்தின் அமைப்பு முறை**

குடும்பம் என்பது மக்களால் ஆக்கப்பெற்று கூட்டாகச் சேர்ந்து செயல்படும் பொழுது உண்டாகும் நடத்தை முறையின் மாற்றமாகும். மக்கள் தலைமுறை தலைமுறையாகக் குழுவாகச் சேர்ந்து கற்ற நடத்தை முறைகள் பழக்கவழக்கங்கள், மரபுகள் சேர்ந்ததே பண்பாடு. மனிதனால் தோற்றுவிக்கப்பட்ட சுற்றுச்சூழல், பொருள்சாராப் பண்புகள், சட்ட திட்டங்கள், நம்பிக்கைகள் இவை அனைத்தும் அடங்கும். அவ்வாறு உருவாக்கப்படும் பண்புகள் மனிதன் பின்பற்றும்படி அமைவதே சிறப்பாகும். குடும்பத்தின் அமைப்பை இதுதான் என்று வரையறுத்துக் கூற யாராலும் இயலாது. இது ஒரு குறிப்பிட்ட நிலையில் தொடங்கி பல நிலைகளைத் தாண்டி அதன் அமைப்பில் முழுமை பெறுகிறது. ஒரு ஆணும் பெண்ணும் சமுதாய மரபுடைய மனவாழ்வைத் தொடங்கும் போதுதான் குடும்பம் என்னும் அமைப்பு தோன்றும்.

குடும்பம் பற்றிய சிறப்பியல்புகளை மானிடவியல் அறிஞர் பக்தவத்சல பாரதி "**பண்பாட்டு மானிடவியல்**" புத்தகத்தில் பலவித கருத்துக்களை ஆராய்ச்சி செய்து வழங்கியுள்ளார். அவர் குறிப்பிடும்பொழுது,

**"குடும்பம் என்பது ஒரு சிறிய குழுவாக இருக்கலாம். பலர் அடங்கிய ஒரு பெருங்குழுவாகவும் இருக்கலாம். இதில் குறைந்த அளவு ஓர் ஆணும் ஓர் பெண்ணும் இடம் பெறவேண்டும். இவ்விருவரும் அவர்களுடைய சமுதாயம் ஏற்றுக் கொண்டுள்ள திருமண முறைப்படி மணம் செய்து கொண்டவர்களாக இருக்க வேண்டும் அவ்வாறு ஓர் ஆணும், பெண்ணும் கணவன் - மனைவி என்ற உறவை ஏற்படுத்திக் கொள்ளும் பொழுதுதான் அவர்கள் ஒரு குடும்பமாக அமைகின்றார்கள். அவர்கள் ஒரே கூரையின் கீழ் உண்டு வாழ்ந்தாலும், காலத்தின் கட்டாயத்தால் தனித்தனியாக உண்டு வாழ்ந்தாலும் கணவன் - மனைவி என்னும் அமைப்பைக் கொண்டவர்களேயாவர்."**[1] (ப:360)

என்று கூறுவதில் இருந்து குடும்பத்திற்கு அடிப்படைக் காரணமே ஆணும் பெண்ணும் தான் என்பதும், அவர்கள் சமுதாயம் ஏற்றுக்கொள்ளும் படியான திருமணம் செய்து வாழ்வதையே உண்மையான உறவுமுறை என்று குறிப்பிடுகிறார். இவர்கள் ஒன்றாக வாழ்ந்தாலும், தனித்தனியாக வாழ்ந்தாலும் திருமண பந்தம் இருக்கும் வரை அவர்கள் இருவரும் கணவன் - மனைவி என்னும் அந்தஸ்து உடையவர்களாகவே கருதப்படுவர்.

மனித சமுதாயத்தில் நாகரீகம் வளர்ச்சியடையும் பொழுது அதன் முதற்படி குடும்பம் என்கின்ற அமைப்பை ஏற்படுத்திக் கொண்டதேயாகும். குடும்பங்களில் உறவுமுறைகள் நீண்டு கொண்டே செல்லும்பொழுது வாழ்க்கையும் சீரும் சிறப்புடனும் சிறந்த நிலையில் உயிர்பெற்று வளர்ச்சியடையும்.

தனிமனிதன் என்பவன் குடும்பத்தில் உள்ள உறவினர்களின் உதவியோடு சமுகத்தில் பயணிக்கத் தொடங்குகிறான். அது ஆணாக இருந்தாலும் சரி பெண்ணாக இருந்தாலும் சரி. இதை கா.சிவத்தம்பி "**நாவலும் வாழ்க்கையும்"** நூலில் குடும்பத்தின் முக்கியத்துவத்தைக் குறிப்பிடுகிறார்.

**"தனிமனிதன் சமுதாய மாற்றங்களிலே பாதிக்கப் பெறுவதும், தனி மனித முனைப்புச் சமுதாய மாற்றங்களை ஏற்படுத்துவதும் அத்தனிமனிதனின் சமூக உறவுகள் குடும்பம், சமூகம், நாடு என்ற நிலைகளில் தெரியவரும். இவற்றுள் குடும்பமே முக்கியமானதும் அச்சாணியானதும் ஆகும்"**[2] (ப:22)

என்று கூறுவதின் மூலம் சமுதாய மாற்றங்களால் மனிதன் பாதிக்கப்படுவதையும் அத்தகைய சமுதாயத்தில் மாற்றங்களை ஏற்படுத்துவதும் ஒரு மனிதன்தான் என்பதையும் அறியலாம். இருப்பினும் சிக்கலுக்கும், தீர்விற்கும் அடிப்படை குடும்பமே என்பதே உண்மை. வாழ்க்கைத் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்ளும் அளவுக்குப் பொருளாதார தன்னிறைவு பெற்றவர்கள்தான் இன்று வாழ்வினை வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்.

குடும்பத்தில் ஒருவன் கட்டுப்பாடுடனும், ஒழுக்கத்துடனும் வளர்க்கப்படும் பொழுது அவன் நல்லவனாகவும், ஒழுக்கம் உடையவனாகவும் விளங்கி சமூகத்தில் நல்ல மதிப்பீட்டினைப் பெற்றுத் திகழ முடியும். ஒருவனுக்குத் தேவையான பண்பாட்டினை உணர்த்தும் கருவியாகவே குடும்பம் உள்ளது. இதில் அமைதியும், பிரச்சனை இல்லாமலும் இருத்தல் சிறப்பானது. இத்தகைய சூழ்நிலையில் மாற்றம் ஏற்படுமெனில் ஒரு சிறந்த குடும்பத்தின் அங்கங்களான கணவன், மனைவி, பிள்ளைகள் ஆகிய அனைவரிடத்திலும் ஒற்றுமையின்மையும், சமாதானமின்மையும் ஏற்படும் பொழுது பல்வேறு சிக்கல்கள் ஏற்பட அடிப்படைக் காரணமாகவே உள்ளது. சிலருக்கு உழைப்பிற்கேற்ற ஊதியம் கிடைக்காமல் அன்றாடத் தேவைகளைக் கூட பூர்த்தி செய்ய முடியாமல் வறுமையிலும் வாழ்க்கை நடத்துபவர்களும் வாழ்ந்து கொண்டுதான் இருக்கிறார்கள்.

## வண்ணதாசனின் குடும்பம் பற்றிய கூற்று

மனித இனத்தின் செயல்கள் உலகிற்குத் தீமை பயப்பதை மிகுதியாகக் கொள்ளாமல் வளங்களை அளவோடு அனுபவித்து வாழ வழிவகை செய்தாலே உலகளாவிய அறங்களை நாம் குறையாது காத்துக் கொள்ள முடியும். மனிதன் தனித்து வாழ விரும்பாமல் மற்றவர்களைச் சார்ந்து அவர்களோடு வாழ்ந்து பழகிக்கொண்டான். பிறருடன் அவனுக்கு ஏற்படுகின்ற

இணைப்புகள் ஒரே வகையினதாகவோ அல்லது வெவ்வேறு வகையினதாகவோ கூட அமையலாம். சமுதாயத்தில் தான் மனிதனின் ஒற்றுமை, பாசம் போன்ற உன்னதமான பண்பு நலன்கள் வளர்வதற்கு முழுமுதற் காரணங்களாகின்றன.

வண்ணதாசன் "**சின்ன விஷயங்களில் மனிதன்**" சிறுகதைப் புத்தகத்தில் நேர்காணல் இரண்டாம் பகுதியில் கூறும் கருத்துக்களை நாம் பார்க்கும் பொழுது மிக எதார்த்தத்தைக் கையாண்டவராகவே தெரிகிறது.

"**வம்ச விருட்சம், குடும்ப வரைபடம் அப்படியொன்றும் என்னிடமில்லை. சீவலப்பேரியின் பக்கத்து கிராமமான குப்பகுரிச்சியிலிருந்து பலசரக்குக் கடை வேலை பார்த்தவர் என் பூட்டனார். அதாவது எங்கள் அப்பாவின் அப்பாத்தாத்தா கு.சிவசங்கரன் பிள்ளை. அப்பாவுக்கு அந்தத் தாத்தா பெயர்தான். அப்பாவையும், அம்மாவையும் தன் 5 வயதுக்குள் இழந்து, தாத்தாவின் பராமரிப்பில் வளர்ந்தவர் அப்பா. ஒரு வசதியான குடும்பத்துப் பேரனான அப்பாவுக்குப் பின்னால் பொதுவுடைமைச் சார்பு ஏற்பட, இப்படிச் சின்ன வயதில் அப்பா அம்மா இல்லாமல் வளந்ததன் உளவியல் ஏதாவது செலுத்தியிருக்குமோ என்று தோன்றுகிறது**"[3](ப:196)

என்று கூறுகிறார். பெற்றோர் முன்னிலையில் வளருகின்ற பிள்ளைகளுக்கும், பெற்றோர்கள் இல்லாத சூழ்நிலையில் வளருகின்ற பிள்ளைகளின் மனநிலையில் ஏற்படுகின்ற உளவியல் தாக்கங்களை இங்கு பதிவு செய்துள்ளார்.

குடும்பம் என்பது வம்சாவளியையும் பாரம்பரியத்தையும் அடிப்படையாகக் கொண்டது. ஓர் சமூகத்தின் முன்னேற்ற வளர்ச்சிக்கு அதுவே ஆதாரம் என்பதையும் அறியலாம். வாழ்க்கை துன்பங்கள் மிகுந்தது. அதில் கிடைத்தவற்றை ஏற்றுக்கொள்ளாமல் கிடைக்காதவற்றை நினைத்து அல்லல் படுவதும் மனிதனின் இயல்புகளில் ஒன்றாகவே உள்ளது.

மனிதனுக்கு குடும்ப அமைப்பு மிகமுக்கியமான ஒன்று. இவ்வமைப்பை இழந்த பிள்ளைகளும் ஒழுங்கான குடும்ப அமைப்பு இல்லாத பிள்ளைகளும் பெரும்பாலும் குற்றவாளிகளாகவே உள்ளனர். குடும்ப அமைப்பு என்பது பொதுவாக நாம் நினைப்பது போன்று சாதாரண அமைப்பு அல்ல. அது மனித இனத்தை வழிநடத்தும் உயர்ந்த பல்கலைக்கழகமாகும். எத்தனையோ புத்தகங்கள் படித்து சொல்லிக் கொடுக்காத கல்வியை எளிதாக போதிக்கும் ஆசானாக உள்ளது.

## குடும்பத்தின் அறநெறி

மனிதனின் சமுதாய வளர்ச்சிக்குத் தனிமனித ஒழுக்கமே பெரிதும் துணை செய்வது. ஒழுக்கம் இல்லாத வாழ்க்கை உயர்வைக் கொடுக்காது. ஒழுக்கம் இல்லாதவன் எவ்வளவு செல்வம் வைத்திருந்தாலும் யாரும் மதிக்க மாட்டார்கள். மனிதன் ஒழுக்கத்திற்குக் கட்டுபட்டு வாழ்க்கை நடத்த வேண்டும். அப்போதுதான் சமுதாயம் பாதுகாக்கப்படும் உலகில் நடைபெறும் தீங்கும் குறையும்.

குடும்பத்தின் தோற்றம் பற்றி ஆராயும் பொழுது மனித சமூகத்தில் அதன் அமைப்பும், செயல்பாடும் வெவ்வேறு நிலைகளில் அறியப்படுவதால் மனிதன் அவற்றைக் கடைபிடிப்பதில் சில சிக்கல்களும் பின்பற்ற இயலாத நிலையும் ஏற்படுகின்றன. மனித சமூகத்தில் குடும்பமானது பல்வேறு காரணிகளை முன் வைத்து பலவாறாகக் கிளைத்து வேறுபாடுகளுடன் காணப்படுகின்றன.

வண்ணதாசன் வாழ்க்கையைப் பற்றிக் குறிப்பிடும் பொழுது. அவரவர் சேர்கின்ற இடத்தைப் பொறுத்தே மாற்றம் பெறுகின்றனர். இதற்கு மனிதனின் தேடலே காரணம் என்பதை விளக்க முற்படுகிறார். "**சின்னு முதல் சின்னு வரை**" சிறுகதைப்பகுதியில்,

**"வங்கி வாழ்க்கை எவ்விதத்திலும் அவரது இயல்பு வாழ்க்கைக்கு எதிராக இருந்ததில்லை என்பதை அவரது படைப்புகள் நிரூபண சான்றாவணங்களாக மெய்ப்பிக்கின்றன. பணி இட மாற்றங்களின் பொருட்டு நகர்ந்து சென்ற இடங்களில் காணும் மனிதர்களே வாழ்க்கை சார்ந்த தேடலின் பாடமாகவும் பாடபேதங்களாகவும் இருந்துள்ளனர்"**[4] (ப:1)

என்று கூறுகிறார். மனிதனின் தேவைக்குக் காரணம் தேடல்களும் இடம்பெயர்வுகளுமே. இத்தகைய தேடல்களுக்கும் இடநகர்வுகளுக்கும் முக்கிய காரணம் குடும்பம் சார்ந்த தேவைகளாக இருப்பதே. தேவைகளைப் பூர்த்தி செய்ய நினைப்பதால் தான் இத்தகைய மாற்றங்களைக் காணும்படியான சூழல் ஏற்படுகின்றது.

மனிதனுக்கு இடப்பெயர்வும் தேடலும் இருக்கும் வரை மாற்றங்களைக் காண வேண்டும் என்பது எழுதப்படாத நியதியாகும். ஆனால் இதையே தேடலும், நகர்வும் இல்லை என்றால் நம் வாழ்வானது எவ்வாறு இருக்கும் என்பதை வண்ணதாசன் எழுதிய "**நொடி நேர அரை வட்டம்**" கவிதையில்,

"**ஒரு பாறையில் / ஒரு கூழாங்கல்லில் / ஒரு மணல் பரலில் / நுழைய விரும்பினேன் / கதவைத் திறக்கச் சொல்லிக் கெஞ்சினேன். / எல்லாப் பக்கங்களிலும் நாங்கள் திறந்தே இருக்கிறோம் / மூன்றுமே சொல்லின / எல்லாப் பக்கமும் திறந்த வீட்டுக்குள் நுழையத் தெரியாத திகைப்பில் / வெளியேயே நிற்கிறேன் / இத்தனை காலமும்"**[5] (ப:55)

என்று கூறுகிறார். நாம் எதையும் தேடவில்லை என்றாலும் வாழ்க்கை நகர்ந்து கொண்டுதான் இருக்கும். நாம் எந்த மாற்றத்தையும் காணாமல் சிக்கல்களுக்குத் தீர்வுகளைக் காணாமல் பிரச்சனைகளை மட்டுமே வைத்துக் கொண்டு நாம் வாழ்ந்து கொண்டிருப்போம். ஆகவே மாற்றமும், தேவையான நேரங்களில் சில நகர்வும் நமக்கு முக்கியமாகும்

சமுதாய அமைப்பில் அனைவரும் ஒற்றுமையாய் இருந்தாலும் தலைவனே உயர்ந்த நிலையைப் பெற்றுத் திகழ்கிறான். அவனே குடும்பத்தை வழிநடத்தும் பொறுப்பினைக் கொண்டிருக்கிறான். இத்தகைய நிலையில் தலைமைக்குரிய பண்பினைப் பெற்றுத் திகழ்வது மிக அவசியமாகும். தலைவன் என்பவன் தன்னை அர்ப்பணம் செய்பவனாகவும் ஏற்றத்தாழ்வின்றி விட்டுக் கொடுத்துச் செல்லும் மனப்பான்மை உடையவனாகவும், இன்ப துன்பங்களைச் சமமாக பங்கிடுபவனாகவும் நடப்பவற்றை மனதார ஏற்றுக் கொள்ளும் மனப்பக்குவத்தோடும் திகழ வேண்டும்.

நாம் செய்யும் செயல்கள் அனைத்தும் சரி என்று குடும்பத்தில் வாழும் தலைவன் எண்ணுதல் முற்றிலும் தவறானது. குடும்பத்தில் கணவன் - மனைவி இருவரும் ஒளிவு மறைவு இன்றி ஒரு பிரச்சனைக்குத் தெளிவான முடிவினை எடுக்க வேண்டும் என்று கூற நினைக்கும் வண்ணதாசன் "**பெயர் தெரியாமல் ஒரு பறவை**" சிறுகதைப்பகுதியில்,

"**வீட்டு பொம்பளைகிட்ட என்றைக்கு யோசனை கேட்டாரு. இன்றைக்கு கேட்க, அப்படிக் கேட்டாத்தான் எம்புட்டோ இதுக்குள்ளே குடும்பம் முன்னிலைக்கு வந்திருக்குமே. முன்னே பின்னே யோசிக்காம இப்படிச் சொல்லிக்கிட்டிருக்கிற மனுஷனை என்ன பண்ண**"[6] (ப:96)

என்று கூறுவதின் மூலம் ஒரு பெண்ணின் எதிர்பார்ப்பும் முக்கியத்துவமும் எவ்வாறு இருக்க வேண்டும் என்பதைக் காட்டுகிறது. அன்றைய காலத்தில் இருந்த பெண்ணடிமைத்தனம் இன்றைய சூழலில் இல்லை என்றாலும். பெண்கள் மீதான அடக்குமுறைகள் இன்றளவும் நடந்து கொண்டுதான் இருக்கின்றன. சில இடங்களில் பெண்களை இழிவுபடுத்துவதும், பொருட்படுத்தாத சூழலும் நிலவுவதைக் காணலாம்

சமூகத்தில் ஒரு மனிதனை அடையாளப்படுத்துவது அவனது நடத்தைகளே. அந்த நடத்தைகளே மதிப்பீடுகளாகவும், விழுமியங்களாகவும் இருப்பது. ஒரு தனிமனிதன் நற்பண்புகளைப் பின்பற்றுவதன் மூலமே குடும்பமும், சமூகமும் வளர்ச்சி பெறும். உலகத்தில் அறத்தைச் சுட்டிக் காட்டும் முறைகள் கணக்கற்றவை இவை அனைத்தையும் ஒட்டுமொத்தமாகக் காட்டக்கூடியவையாக விழுமியம் உள்ளது. மக்கள் வாழ்ந்து அறிந்து அடுத்த தலைமுறைக்குக் கொடுத்துச் செல்லும் அனுபவங்கள், நெறிகள் அனைத்தும் சமூக நல்லிணக்கத்துடனும், கட்டுக்கோப்புடனும் இருப்பதற்கு உதவி புரிகின்றன.

மனிதனுடைய மனம் தான் அனைத்திற்கும் முக்கிய காரணமாக உள்ளது. சிந்திப்பதையும் சிந்தித்ததை நடைமுறைப்படுத்துவதையும் மனமே கொண்டுள்ளது. மனிதனுக்கு மட்டுமே வாய்க்கப்பெற்ற பெரும் செல்வம் மனம். விலங்குகளுக்கும் மனிதனுக்கும் உள்ள வேறுபாட்டினை பிரித்துக் காட்டுவதே இந்த மனம் தான். இத்தகைய மனம் நன்மையையும் செய்கிறது சில நேரங்களில் தீமையையும் செய்கிறது. இதனால் சேர்ந்த குடும்பங்களும் உண்டு சில நிமிடங்களில் பிரிந்த குடும்பங்களும் உண்டு. எனவே மனமானது வார்த்தைகளுக்கு அடிப்படையாக உள்ளது.

வண்ணதாசன் “பெயர் தெரியாமல் ஒரு பறவை” கதைப்பகுதியில் வார்த்தைகளால் ஏற்படும் பிரச்சனைகளைப் படம் பிடித்துக்காட்டியிருப்பதை,

**“இந்த வார்த்தையை எல்லாம் இந்த மனிதன் பேசவில்லை. இந்தச் சம்பளம், இந்தச்சம்பளத்தை மீறி நாலு பக்கமும் உதைத்துக் கொண்டு கிடக்கிற வாழ்க்கை இந்த மனுஷனை இப்படிப் பேசச்சொல்லுகிறது. இவன் நம்மிடம் பிரியமாகவே இருந்தான். பிரியமாக இருந்தே இந்த நாலு குழந்தைகளையும் பெற்றான். இப்போதும் பிரியத்துக்குக் குறைச்சலில்லை”**[7] (ப:53)

என்று கூறுகிறார். மனிதன் தானாக எதுவும் பேசுவதில்லை. சூழ்நிலைதான் மனிதனை மாற்றுகிறது பணம் மனிதனின் மதிப்பீட்டினையும் எடுத்துக்காட்டுகிறது. செல்வாக்கில் உயர்ந்தவன் கீழ்நிலையில் இருப்பவனை ஏளனமாகப் பார்க்கும் எண்ணம் இன்றளவும் நிலவிக்கொண்டிருக்கின்றது. அனைவரையும் சமமாகப் பார்க்கும் எண்ணம் அவ்வளவு சீக்கிரம் மனிதனுக்கு ஏற்படுவதில்லை.

வண்ணதாசன் **“உருப்பளிங்கு**” கவிதையில் குறிப்பிடும்பொழுது வார்த்தையின் அளவினை,

“**எவ்வளவு சொற்கள் /எவ்வளவு மேற்கோள்கள் / எவ்வளவு தர்க்கங்கள் / எவ்வளவு சமன்பாடுகள் எவ்வளவு கேள்விகள் / எவ்வளவு நிரூபணங்கள்**! / **இன்று வெயில் அதிகம் / இதைச் சொல்ல வருகிறாய், / அவ்வளவு தானே.”**[8](ப:69)

என்று கூறுவதன் மூலம் மனிதனின் துன்பநிலைகள் நம் கண்முன் நிற்கின்றன. மனிதனுக்கு ஆயிரம் கேள்விகளும் அதற்கான விடைகளும் தெரிந்திருந்தாலும் அது அவனுடைய

தேவைக்கு என்று வரும் பொழுது பயன்படுவதில்லை. மனமானது புதிதாக, புதியவரின் ஆறுதல் வார்த்தைகளை நாடியே செல்கிறது.

வாழ்க்கை நிர்பந்தங்களில்லாமல் இயல்பாக நிகழ்ந்து கொண்டிருப்பது எதனிடமும் அதிகாரமோ அகந்தையோ கொள்ள வாழ்வில் இடமில்லை. வாழ்க்கை என்றும் நமக்காகக் காத்திருப்பதில்லை அது ஒரு பூவைப்போல் மலர்ந்து இருக்கிறது. அதன் அழகைக் கண்டு ரசித்து இன்புறவேண்டும். வாழ்வு ஒருபோதும் நம் வற்புறுத்தலுக்காகப் பணியாது என்று வண்ணதாசன் குறிப்பிடுகின்றார்.

**குடும்பத்தின் பணிகள்**

குடும்பத்தின் இன்றியமையாத பணிகளுள் ஒன்று குழந்தைகளுக்குக் கற்பிப்பது. இளங்குழந்தைப் பருவத்திலிருந்தே குழந்தைகள் உயர்திணை பண்பாட்டினை அறிந்து செயல்படவும், பொறுப்புடைய மனிதராகச் செயற்படவும், குழந்தைகளுக்குத் தேவையானதை எவ்வாறு முயற்சி செய்து பெறவேண்டும் என்பதற்கும் பயிற்சியளிக்கப்படுகிறது. சமுதாயத்தின் நெறிமுறைகள் அன்றாடம் வாழ்வில் கடைபிடிக்க வேண்டிய பழக்கவழக்கங்கள், பொருளாதாரச் செயல்களைச் செய்யும் முறைகள் சமுதாய, சமய வாழ்வில் நாம் பின்பற்ற வேண்டிய கடமைகள் போன்ற எண்ணற்ற வகைகளில் குடும்பம் குழந்தைகளுக்குக் கற்றுத் தந்து அவர்களைச் சமுதாயத்தின் சிறந்த குடிமக்களாக மாற்றுகின்றது.

வண்ணதாசன் "**மனுஷா மனுஷா**" சிறுகதை உறவுகளின் உன்னத நிலையினை அறியும்படியாக உள்ளது. ஒரு நல்ல குடும்பமே சிறந்த பல்கலைக் கழகத்துக்கு அடிப்படை என்று கூறுகிறார். குடும்பம் சிறந்து இருந்தாலே அனைத்து விதமான மதிப்பீடுகளையும் கற்றுக்கொள்ள முடியும். இதனை,

"**ஒரு மனிதன் கல்யாணம் கட்டுவதிலோ, பிள்ளை குட்டி பெற்றுப் பள்ளிக் கூடத்திற்கு அனுப்புவதிலோ, மனைவியோடு ஆட்டோ பிடித்து சினிமாவுக்குப் போவதிலோ சினிமாவின் சராசரிக் கிளர்ச்சியுடன் இருக்கிற மனைவியுடன் சந்தோஷமாகப் பொழுதைக் கழித்துப் படுத்துத் தூங்குவதிலோ இதில் எல்லாம் பெரிய அதிசயம் ஒன்றுமில்லை.**"[9] (ப:12)

என்று கூறுவதின் மூலம் குடும்பத்தின் தலையாய பணி என்ன என்பது நமக்குப் புலனாகிறது. திருமணம் என்பது கடமைகளின் இருப்பிடமாகும். நம்மை முழு மனிதனாக மாற்றுவது திருமணமே. நம்மை நாமே அறிந்து கொள்ளவும் நாம் பிறரை அறிந்து கொள்ளவும் உதவுவது திருமணம் எனும் பந்தமே.

வண்ணதாசன் **"என் ஓவியம் உங்கள் கண்காட்சி**" கவிதையில் வாழ்க்கைக்குள் இருந்து கொண்டே வாழ்க்கையைத் தேடிக்கொண்டு இருப்பதை குறிப்பிட்டுக் கூறியுள்ளார்.

**"ரொட்டியின் நுரைத்த மெல்லிய / குழிகளுக்குள் இருந்து எறும்புகள் வருகின்றன / ஒரு ரொட்டிக்குள் நுழைவது எப்படி என / இத்தனை பசித்த வருடங்களிலும் / நான் அறிந்தேனில்லை / எப்போதும் ரொட்டிக்கு வெளியிலேயே / இருக்கிறவனாகவே நேர்ந்துவிட்டது / எறும்புகள் உள்ளேயும் வெளியேயும் / இருக்கும் திறமைசாலிகள் / ரொட்டியை விட எறும்பு சிறியது."**[10] (ப:49)

என்று கூறுவதைக் காணும் பொழுது புற உலகில் காணும் போலியான நடைமுறைகளைக் கண்டு நம் கண் முன் ஓடிக்கொண்டிருக்கும் உண்மை நிகழ்வுகளை ஏற்றுக்கொள்ள முடியாமல்

இருக்கிறோம். வண்ணதாசன் கூறிப்பிடுவது என்னவெனில் ரொட்டித் துண்டைத் தேடிச்செல்லும் எறும்பிற்குத் தெரியாது நம்மைவிட அது பெரிது என்று இதில் நேர்மறையான சிந்தனையும் உண்டு சில எதிர்மறையான சிந்தனையும் உண்டு. வாழ்க்கையும் ரொட்டித்துண்டைப் போன்றதே. நம் பிரச்சனை அதில் எறும்பைப் போல் இருந்தால் மிகச் சிறந்ததே.

வாழ்வு ஒரு சித்திரம் அதை அழித்து நம் வற்புறுத்தல்களுக்குப் பணிய வைக்க முயற்சிக்கக் கூடாது. அதன் இயல்பில் அனுபவிக்கக் கற்றுக் கொள்ள வேண்டும். பிறர் செய்வதைப் பார்த்து பிரதி எடுப்பதிலோ, நகல் செய்வதிலோ, அதையே பின்பற்றுவதிலோ வாழ்க்கை சிறப்படைவதில்லை.

## குழந்தை வளர்ப்பில் குடும்பத்தின் பங்கு

மனிதன் சேர்க்கையே குடும்பத்தையும், குடும்பத்தின் சேர்க்கையே சமூகத்தையும் தீர்மானிக்கின்றன. அத்தகைய குடும்பத்தில் வாழும் மனிதன் உயர்வையும், மரியாதையையும், மதிப்பீடான வாழ்க்கையையும் வாழக் கடமைப்பட்டிருக்கிறான். கணவன் மனைவி குழந்தைப்பேருடன் சிறந்த பணியோடு வாழ்க்கை நடத்துபவனின் மதிப்பீடு சமூகத்தில் உயர்வுதான். பணம், பொருள், பதவி, வீடு, வாகனம், எனப் பலதரப்பட்ட பொருட்கள் இன்று மனிதனின் வாழ்க்கையிலும் சிந்தனைகளிலும் முக்கிய இடத்தைப் பெறுகின்றன.

பெற்றோர்கள் சமுதாய வாழ்வின் அனைத்து நிலைகளிலும் தம் குழந்தைகளுடன் செயல்களை நிறைவேற்றும் பொழுது அது குறித்த நுணுக்கங்களைக் குழந்தைகள் பெற்றோர்களின் விளக்கங்கள் மூலமும் தாமே நேராக உற்று நோக்குதல் மூலமும் அறிந்து கொள்கின்றனர். குழந்தையானது தம் பண்பாட்டை தானாகவே உற்றுநோக்கி அறிவதன் மூலமே அதனை முழுமையாக அறிந்து கொள்ள முடியும். குழந்தைகள் பெரும்பாலான சூழ்நிலைகளில் அனைத்தையும் அறிந்து கொள்வது குடும்பச் சூழலில்தான்.

குடும்பத்தில் வாழ்கின்ற பெரிய மனிதர்களே இளம் தலைமுறையினருக்கு வழிகாட்டி ஆவர்கள். இளையோர் கூறும் கருத்திற்கு மூத்தோர்கள் மதிப்பும், மரியாதையும் தருவது மிக அவசியமாகும். இந்நிலையில் முரண்பாடுகள் களைவதற்கு வாய்ப்பும் ஏற்படுகின்றது. இதனால் அவர்களுக்கு தன்னம்பிக்கையும், தற்சார்பும், பாதுகாப்பும், முயற்சி செய்யும் பழக்கமும் ஏற்படுகின்றது.

தனிமனிதன் என்பவன் குடும்பம் என்னும் கட்டுக்குள் வரும்பொழுது அவனது எதிர்பார்ப்புகளும், தேவைகளும் அதிகமாகவே இருக்கிறது. ஆனால் அதைவிட பொறுப்புகள் மிகமிக அதிகமாகவே உள்ளது. வண்ணதாசன் “**பெயர் தெரியாமல் ஒரு பறவை**” யில் குறிப்பிடும்பொழுது,

“**வரையறைக்கு உட்படாத உறவுகளும் பெயர்களுக்கு அப்பாற்பட்ட முகங்களும் மின்னல் பொழுதில் தகவமைந்து விடுகிற நுட்பமான சில தருணங்களைக் கண்டடையும் சாத்தியங்களையும் இந்த வாழ்வு முன்வைக்கிறது**”[11](ப:10)

என்று கூறுகிறார். இதன் மூலம் வெறுமையாக இந்த வாழ்வை எண்ணிக் கொண்டு இருக்கும் நிலைமாறி தனிமனிதன் குடும்ப அமைப்பில் நுழைவதும் அதன் பிறகு குழந்தைகள் அதற்கான தேவைகள் என்று ஏற்படும்பொழுது வரையறைக்கு அப்பாற்பட்ட நிகழ்வுகளே நம் வாழ்க்கையை ஆட்சி செய்;ய ஆரம்பிக்கின்றன.

“**என் ஓவியம் உங்கள் கண்காட்சி**”யில் கண் மூடி கண் திறக்கும் நேரத்தில் அனைத்தும் நடந்தேறுகிறது, இத்தகைய இடர்பாடுகளுக்குக் காரணம் மனிதனின் அறியாமையே என்பதையும் அறிய முற்படவேண்டும் என்பதை,

**“இடை வழி நிலையத்தில் / நடு நிசியில் ஏறி / முன்பதிவு இருக்கை தேடும் / மென்வெளிச்ச நகர்வில் பொங்கிப் பொங்கி அழுதபடி இருந்த / கீழ்ப்படுக்கைக்கார முதியவர் / அவரசமாகக் கண்துடைத்து நேரம் கேட்டார். / நேரம் ஆயிற்று / என்று மட்டும் சொன்னேன்”**[12] (ப:28)

என்கிறார். நாம் ஏறி அமரும் நேரத்தில் நமது பயணங்கள் முடிவதை வண்ணதாசன் குறிப்பிடும்பொழுது வாழ்க்கையை நாம் அறிந்து கொண்டு அனுபவங்களைப் பெற்று நிறைவாக வாழ நினைக்கும் பொழுது வாழ்க்கைப் பாதை முடிந்து போவதையும் அறிய முடிகிறது எனக் குறிப்பிடுகிறார்.

“**மனித விழுமியங்கள்**” நூலில் வாழ்க்கையைப் பற்றிய சில கருத்துக்களைக் குறிப்பிடும்பொழுது துன்பம் என்பது இயல்பாக இருப்பது என்பதையும், அதற்கான தீர்வுகள் கண்டறிதல் மூலமே கிடைக்கும் என்பதையும்,

“**இயற்கை கற்றுத் தந்த பாடத்தோடு இனி மனித வாழ்க்கையை நோக்குவோம். மனித வாழ்க்கை துன்பங்கள் நிறைந்துள்ளது என்பது பரவலாகப் பேசப்படுகின்ற பேச்சு. இன்று நேற்றல்ல, மனித நாகரீகம் தொடங்கிய காலத்திலிருந்தே இவ்வாறாகப் பேசப்பட்டு வருவதை நாம் அறிவோம். காலத்துக்குக் காலம் பல ஞானிகள் தோன்றினர், சமயப் பெரியோர்கள் உருவாகினர் மனித வாழ்க்கைத் துன்பங்களுக்குரிய காரணங்களைக் கூறி அத்துன்பங்களிலிருந்தும், மனிதர்கள் விடுதலை பெறுவதற்கு வழி வகைகள் யாவை என்பதையும் கூறிப்போந்தனர்.”**[13] (ப:1)

என்று குமாரசாமி சோமசுந்தரம் குறிப்பிடுகிறார். எனவே பிரச்சனைகள் ஒன்றாக இருந்தாலும் அதற்கு தீர்வுகளை நாம் பல வழிகளில் கண்டறிவது நம் கையில் தான் உள்ளது. மனிதர்களாக உருவாகிய நாள் முதலே பிரச்சனைகளும் உருவாக ஆரம்பித்தன. அதோடு தீர்வுகளையும் முன்னோர்கள் வகுத்து வைத்தனர். ஒர் இடத்திற்குச் செல்ல பல வழிகள் இருக்கும் பட்சத்தில் ஒரு வழி தான் வேண்டும் என்று நினைப்பது நம் அறியாமையே.

அக்காலத்தில் வாழ்ந்த உயர்ந்தோர்களும் அறிவில் சிறந்தோர்களும் நானே பெரியவன், அனைத்திலும் உயர்ந்தவன் என்ற அகந்தைக் குணத்தைப் பெற்றிருக்கவில்லை. சிறு உயிர்களுக்குக் கூட தீங்கு ஏற்படாத வகையிலே வாழ்ந்து வந்தனர். சிறுசிறு சங்கடங்கள் நேர்ந்தாலும் அதைப் பெரியதாக எடுத்துக்கொள்ளாமல் பொறுமையுடன் மனம் தளராமல் ஏற்றுக் கொண்டு வாழ்ந்தனர். உண்மை, பொய் இரண்டையும் ஆராய்ந்து நடுநிலையுடன் செயல்பட்டனர். அத்தகைய உயர்வான சான்றோர்கள் வாழ்ந்து சமூகத்தின் மதிப்பீட்டினைப் பெற்றுத் திகழ்ந்தனர்.

வண்ணதாசன் “**ஒளியிலே தெரிவது**” சிறுகதையில் சில நேரங்களில் கற்பனையான விஷயங்களைத் தேடி அலைவதைக் குறிப்பிட நினைக்கும் ஆசிரியர்,

“**எதையெல்லாமோ நினைத்துக் கொண்டு இருந்தேன் என்று சொன்னால் அது இந்த நேரத்தில் அந்தப் பக்கத்துக்காக எதிர்பார்க்கிற பதிலாக இராது. இப்படியே அடுத்தடுத்துப் பின்னால் திரும்பிப் போவதில் தென்படும் தொடர்பற்ற சித்திரங்களின் மாய நிறத்தை மனம் எப்படித் தேர்ந்தெடுத்துக் குழைகிறது”**[14](ப:122)

என்று கூறுகிறார். அந்தக்காலத்தில் கற்பனையான விஷயங்களை எண்ணி வாழ்க்கையை யாரும் நகர்த்தவில்லை. உழைப்பினை மட்டுமே கருத்தில் கொண்டு தன் குடும்பத்திற்காக முன்னேறிச்சென்று அனைவரிடமும் மதிப்பீட்டினை வளர்த்துக் கொண்டனர். இன்றைய நிலையில் கனவுகள் மட்டுமே மனிதனை வழிநடத்திச் சென்றுகொண்டிருக்கிறது.

குடும்பத்தின் மற்றொரு பணி குடும்ப உறுப்பினர்களை அன்புடன் நடத்துவதாகும். குறிப்பாக இளங்குழந்தைகளிடம் அன்பினைப் பேணும்போது அவர்களும் அதனைப் பின்பற்றி வாழும்பொழுது வளர்ச்சியில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தும். குடும்ப உறுப்பினர்கள் ஒவ்வொருவரும் குழந்தைகள் மீது செலுத்தும் அன்பு, பாசம், பரிவு, அரவணைப்பு, கவனிப்பு முதலியன குழந்தைகளுக்குப் பாதுகாப்பான உற்சாகமான வாழிடச் சூழலை ஏற்படுத்தித் தருகின்றன. அதனால் குழந்தையின் மனவளர்ச்சி மிகவும் உகந்த நிலையில் அமைவதால் சமுதாயம் போற்றிக் காக்கும் பண்புகளை மதிக்கும் நல்ல ஓர் உறுப்பினர்களை உருவாக்கும் வாய்ப்பும் ஏற்படுகிறது.

"**பெயர் தெரியாமல் ஒரு பறவை**"யில் குழந்தைகளின் இயல்பான இயற்கையான குணாதிசயங்களைக் குறிப்பிடுகிறார். இதை நாம் அறியும் பொழுது சிறு பிள்ளையாகவே வாழ்வு இருந்திருக்கலாமோ என்று எண்ணும் அளவுக்கு எண்ணம் சென்றுவிடுகிறது.

**"பெரியது ஆக ஆகத்தான் அடியையும் வலியையும் கோபத்தையும் மறக்கத் தெரியவில்லை. சிறு பிள்ளைகள் உடனடியாகவே மறந்து விடுகின்றன. இத்தனை அடிபட்டதை அது ஞாபகம் வைத்திருப்பது மாதிரியே தெரியவில்லை. சந்தோஷமாக இருக்கிறது. பிரியமாக இருக்கிறது. தம்பியுடன் விளையாடுகிறது"**[15] (ப:57)

என்று கூறுகிறார். ஏனெனில் குழந்தையின் மனதில் மட்டுமே பழிவாங்கும் எண்ணமும், வஞ்சக எண்ணமும் நிலைப்பதில்லை. அப்பொழுது நடக்கும் பிரச்சனைகளை அப்பொழுதே மறந்து விடுகின்றனர். அத்தகைய மனம், வளர்ந்த பிறகு இருக்கிறதா? என்பது கேள்விக் குறியாகத்தான் உள்ளது. சில நேரங்களில் நம் மனமும் சிறுபிள்ளைகளைப் போல இருப்பதையே விரும்புகின்றது. இன்றைய வாழ்க்கை நெருக்கடிகளும் அவசரங்களும் நிறைந்தது. எதையும் நின்று நிதானித்து அழகில் ஈடுபடுகிற அவகாசத்தை தருவதில்லை. இந்த வாழ்க்கை மனிதனை இயந்திரமாக மாற்றிவிட்டது

வண்ணதாசன் "**உருப்பளிங்கு**" கவிதைப்பகுதியில், நமக்கு இருப்பது போல் தோன்றும் அனைத்தும் சில நேரங்களில் இல்லாமல் போவதும் இயற்கையே என்னும் கருத்தை வலியுறுத்தும் வகையில்,

**"இப்போது பார்த்தேன் / எல்லாம் இருக்கிறது / என்ற வரியின் கீழ் எழுதப்பட்டிருக்கிறது / ஒன்றும் இல்லை"**[16] (ப:75)

விளைகிறார். கவிஞர் குழந்தைகளுக்கு எல்லாம் தான் இருக்கிறது. கோபம், பிடிவாதம், அழுகை இன்னும் சில, ஆனால் அவை ஒன்றும் இல்லாமல் போய்விடுகிறது. சிறிது நேரத்தில் குழந்தையின் குணம் அவ்வளவு மென்மையாக உள்ளது என்பதே மறுக்க முடியாத உண்மையாகும். வாழ்வில் ஒவ்வொன்றும் அதனதன் சுழற்சியில் நடந்தே தீர்கிறது. எதற்காகவும் வாழ்வு காத்திருப்பதில்லை. வாழ்வு தரும் வாய்ப்புகளுக்கான தன் அழைப்பிதழ்களை நீட்டிய வண்ணம் உள்ளது.

காலம் வாழ்வின் நிகழ்வுகளை அதன் போக்கிலே நகர்த்திக் கொண்டிருக்கின்றது. வாழ்வு என்பது அன்றன்று வாழ்ந்து தீர்க்க வேண்டிய ஒன்று. அது நிகழ்வின் யாதார்த்தம் மட்டுமே. புதுயுகம் பிறக்குமென்ற எதிர்பார்ப்புத் தேவையில்லை. நிகழ்காலத்தில் இருக்கின்றது வாழ்க்கை, காலச்சூழலே வாழ்வை எதிர்கொள்ளும் ஆற்றலை மனிதனுக்குத் தேடித்தருகின்றது.

**பார்வை நூல்கள்**


1. 1.பக்தவத்சல பாரதி. “பண்பாட்டு மானுடவியல்”, மணிவாசகர் பதிப்பகம், 8,7 சிங்கர்
2. தெருபாரிமுனை, சென்னை, முதற்பதிப்பு - 1990.
3. 2.சிவதம்பி.கா “நாவலும் வாழ்க்கையும்”, தமிழ்ப்புத்தகாலயம், சென்னை, முதல் பதிப்பு
4. 1979.
5. 3.குமாரசாமி சோமசுந்தரம். “மனித விழுமியங்கள்”, ரஜி வெளியீடு, 73, 2/1
6. விகாரை லேன், கொழும்பு இலங்கை, முதற்பதிப்பு 1995
7. 4.வண்ணதாசன், “சின்ன விஷயங்களில் மனிதன்”நேர்காணல் - 2, “சின்னு முதல் சின்னு வரை”, “நொடி நேர அரை வட்டம”;, “பெயர் தெரியாமல் ஒரு பறவை”,“உருப்பளிங்கு”, “மனுஷா மனுஷா, “என் ஓவியம் உங்கள் கண்காட்சி”, சந்தியா பதிப்பகம், புதிய எண் 77, 53வது தெரு, 9வது அவென்யூ, அசோக் நகர், சென்னை, முதற்பதிப்;பு - 2019

**References**

1. Bhakthavathsalabharathi. "Cultural Anthropology", Manivasagar Publications, 8/7, Singer Street, Parimunai, Chennai, First Edition – 1990.
2. K. Sivathamby. "The Novel and Life", Thamizh Puththakalayam, Chennai, First Edition 1979.
3. Kumarasamy Somasundaram. "Human Values", Raji Publishing, 73, 2/1 Viharai Lane, Colombo, Sri Lanka, First Edition 1995.
4. Vannadasan, "Man in Small Things" - Interview 2, "From Chinnu to Chinnu", "A Half Circle in a Moment", "A Bird Without a Name", "Mirror Fragment", "Manusha Manusha", "My Painting, Your Exhibition", Sandhya Publications, New No. 77, 53rd Street, 9th Avenue, Ashok Nagar, Chennai, First Edition – 2019.



**Copyright (c) Author**

**This work is licensed under a Creative Commons Attribution 4.0 International License.**

**Our journal adopts CC BY License Creative Commons Attribution 4.0 International License http://Creativecommons.org//license/by/4.0/ . It allows using, reusing, distributing and reproducing of the original work with proper citation.**